ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1789/16 - 2012 දෙසැම්බර් 18 වැනි අඟහරුවාදා - 2012.12.18
*1789/16 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. : 3/1/2/28.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் காணியின் விபரம் :

வடமேல் மாகாணத்தில், குருணாகல் மாவட்டத்தில், மாவத்தகம பிரதேச செயலாளர் பிரிவில், வெத கோரலே சிறு பிரிவில், தெல்பத்தன கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை மா அதிபரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. எப்.வீ.பீ. 1105, தாள் இல. 10, பிற்சேர்க்கை இல. 10 இல் விபரிக்கப்பட்டுள்ள சுமார் 0.0003 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய காணித் துண்டின் விபரங்கள் பின்வருமாறு :

*1. துண்டு இல. 01*

காணியின் பெயர் : ஹீன்கந்த கும்புர ; விபரம் : பாதை ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : எம். எச். எம். ஹலீல் மற்றும் எம். எச். எம். நஜார், இல. 97, கண்டி வீதி, பரகஹதெனிய, வெவுத ; விஸ்தீரணம் : 0.0003 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மாவத்தகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஈ. எம். எம். எஸ். ஏகநாயக,
பிரதேச செயலாளர்,
மாவத்தகம.

பிரதேச செயலகம்,
மாவத்தகம,
2012.11.05.

01 - 55